செ.வெ.எண்: 31 நாள்: 14.08.2021

## பத்திரிக்கைச் செய்தி

## நானோ யூரியா பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறுவீர்

பயிர்களுக்குத் தேவையான பேருட்டச்சத்துக்களில் முக்கியமானது தழைச்சத்து ஆகும். இதனை பொதுவாக யூரியா அல்லது அமோனியாக்கல் வகை உரங்கள் மூலம் பயிர்களுக்கு கொடுக்கப்படுகிறது. பொதுவாக யூரியாவில் தழைச்சத்து நைட்ரஜன் 46% உள்ளது.

பொதுவாக இந்தியாவில் 60 மில்லியன் டன் உரங்கள் ஆண்டிற்கு பயன்படுத்தப்படுகின்றன. நமது அரசாங்கம் சுமார் 0.80 லட்சம் கோடி (2021-22) வரை உரமானியமாக வழங்கி வருகின்றது. அதன்படி புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நானோ யூரியா விவசாயிகளுக்கு மிக குறைந்த விலையில் IFFCO நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### திரவ நானோ யூரியா

குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தும் போது 70%-க்கு மேலான யூரியா பயிர்கள் எடுத்துக்கொள்ளாத நிலையில் வீணாகின்றன. இதனால் மண் அமில தன்மையாக மாறுவதோடு தண்ணீரில் கரைந்தோடும் யூரியா நீர்நிலைகளையும் மாசுபடுத்துகின்றது. நானோ யூரிவானது பயிர்களின் இரண்டு முக்கிய வளர்ச்சி நிலைகளில் இலை வழியாக தெளிப்பதற்கு ஏற்றது. 500 மி.லிட்டர் கொண்ட ஒரு நானோ யூரியா பாட்டிலானது 45 கிலோ எடையுள்ள குருணை வடிவ யூரியா மூட்டைக்கு சமமானதாகும். இதன் மிக நுண்ணிய துகள்களானது இலைகளில் உள்ள துவாரங்கள் மற்றும் பிற திறப்புகளின் வழியாக பயிர்களால் நேரடியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### நானோ யூரியாவின் சிறப்பு அம்சங்கள்

- நானோ யூரியாவில் உரப்பயன்பாட்டுத்திறன் குருணைவடிவ யூரியாவை விட அதிகமாக உள்ளது.
- நீடித்த நிலையான சுற்றுப்புறச் சூழலுக்கும், உணவுக்கும் பாதுகாப்பானது.
- நானோ யூரியா பயன்படுத்துவதன் மூலம் 50% குருணை வடிவ யூரியாவைக் குறைக்கலாம்
  மற்றும் 8 சதவீதம் பயிர் மகசூலை அதிகரிக்கலாம்

### பயிருக்கு தேவையான அளவு மற்றும் அளிக்கும் முறை

ஒரு ஏக்கருக்கு தேவையான 500 மில்லி லிட்டர் நானோ நைட்ரஜனை 125 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிரின் இலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். (அல்லது) 2-4 மில்லி லிட்டர் நானோ யூரியாவை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 32 சதுர மீட்டரில் தெளிக்க வேண்டும். நானோ யூரியா உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் பயன்படுத்த வேண்டும்.

மேலும் விவசாயிகள் நானோ யூரியாவினை IFFCO-BAZZAR(ரூ.240/500மிலி) இணையதளத்தில் அல்லது உரக்கடைகளில் வாங்கி பயன்பெறலாம். மேலும் இது தொடர்பான கூடுதல் தகவலுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அலுவலர்களை அல்லது திரு.பொம்மண்ணன், கள அலுவலர், IFFCO 9445194705 அவர்களை அணுகுமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**